IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 111 /2013
Deposition of witness for DW1

Name : முருகேசன்

Father's Name : கெஜராஜ்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 16 day of December, 2021.

குறுக்கு விசாரணை

நான் கீழ் ஆலத்தூரில் நர்சரி பிரைமரி பள்ளி நடத்தி வருகிறேன். இந்த வழக்கில் எந்தெந்த சர்வே எண்ணிற்காக வழக்கிட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. அதன் விஸ்தீரணம் என்னால் சொல்லமுடியாது. சின்னப்பகவுண்டரை எனக்கு தெரியும் அவர் எனது அப்பாவின் அத்தையின் கணவர். இந்த வழக்கு சொத்துக்கள் சின்னப்பகவுண்டருக்கு எப்படி வந்தது என்று கேட்டால் பாகப்பிரிவினையா அல்லது பூர்வீக சொத்தா என்று எனக்கு தெரியாது. சின்னப்பகவுண்டருக்கு இரண்டு மகன்கள் என்றால் சரிதான். ஒருவர் பெயர் கோவிந்தராஜ், சந்திரன் ஆவார்கள். சந்திரன் தான் இந்த வழக்கின் 2ம பிரதிவாதி என்றால் சரிதான். ஈஸ்வரியம்மாள் சின்னப்பகவுண்டரின் மகன் கோவிந்தராஜ் என்பவரின் மனைவி. வாதி ஞானசேகரன் கோவிந்தராஜ் என்பவரின் மகன் என்றால் சரிதான். அதாவது 1ம் பிரதிவாதி ஈஸ்வரியம்மாளின் ஒரே மகன் என்றால் சரிதான். இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு ஒரே வாரிசு ஞானசேகரன் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் சின்னப்பகவுண்டரின் சொத்துக்கள் என்றால் சரிதான். பேரன் என்ற அடிப்படையில் வாதி பாகப்பிரிவினை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் வாதிக்கு சின்னப்பகவுண்டரின் பேரன் என்ற அடிப்படையில் பாகம் உள்ளது என்றால் சரிதான். ஞானசேகரன் தற்பொழுது செங்கல் அறுக்கும் தொழில் செய்துவருகிறார். தாவா சொத்துக்களைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், அதைப்பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். கோவிந்தராஜ்

சிலசொத்துக்களை 2ம் பிரதிவாதிக்கும், மகாதேவகவுண்டருக்கும் விற்பனை செய்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரத்திற்கு அந்த சொத்துக்களின் சர்வே எண், விஸ்தீரணம் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எந்த தேதியில் கோவிந்தராஜ் விற்பனை செய்தார் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதுசம்மந்தப்பட்ட ஆவணங்களிலும் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரத்தைப்பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். எனவே நான் தாக்கல் செய்திருக்கும் முதல் விசாரணை வாக்குமூலம் உண்மைக்கு புறம்பானவை என்றும், ஏற்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.